දුරකථන
தொலைபேசி
Telephones } 011-2136600
011-2136650

ලේකම්
செயலாளர்
Secretary } 011-2136602

ෆැක්ස්
தொலைநகல்
Fax } 011-2876169
011-2876181

විද්‍යුත් තැපැල
மின் - அஞ்சல்
E-mail } info@psc.gov.lk

වෙබ් අඩවිය
இணையத்தளம்
Website } www.psc.gov.lk

මගේ අංකය
எனது இல.
My No. } PSC/EST/05-03/03/2019

ඔබේ අංකය
உமது இல.
Your No. }

දිනය
திகதி
Date } 2020.01. 01

**රාජ්‍ය සේවා කොමිෂන් සභා කාර්යාලය**
**அரசாங்க சேவை ஆணைக்குழு அலுவலகம்**
**OFFICE OF THE PUBLIC SERVICE COMMISSION**

අංක 1200/9, රජමල්වත්ත පාර, බත්තරමුල්ල
இல. 1200/9, இராஜமல்வத்தை வீதி, பத்தரமுல்லை.
**No. 1200/9, Rajamalwatta Road, Battaramulla**

அரசாங்க சேவை ஆணைக்குழு சுற்றறிக்கை இல. 01/2020

அமைச்சு செயலாளர்கள்,

திணைக்களத் தலைவர்கள்.

<u>அனுமதிக்கப்பட்ட ஆட்சேர்ப்புத் திட்டங்களில் மற்றும் சேவைப் பிரமாணக் குறிப்புக்களில் குறிப்பிடப்பட்டுள்ள “உடன் முன்னரான ஐந்து (05) வருட திருப்திகரமான சேவைக் காலம்” தொடர்பிலான ஏற்பாடுகளை திருத்தம் செய்தல்</u>

மேற்படி விடயம் குறித்து அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் பின்வரும் தீர்மானங்கள் வழங்கப்பட்டுள்ளன.

01. அனுமதிக்கப்பட்ட ஆட்சேர்ப்புத் திட்டங்கள் மற்றும் சேவைப் பிரமாணக் குறிப்புக்களில் ஒரு தரத்திலிருந்து இன்னுமொரு தரத்திற்கு பதவி உயர்வு வழங்கும் நோக்கத்திற்காக மற்றும் மட்டுப்படுத்தப்பட்ட மற்றும் திறமை (சேவை அனுபவம்) ஆகிய பிரிவுகளின் கீழ் ஆட்சேர்ப்பு நோக்கங்களுக்காக தகைமையொன்றாக பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படும் **“உடன் முன்னரான ஐந்து (05) வருட திருப்திகரமான சேவைக் காலத்தைப் பூரணப்படுத்தியிருத்தல்”** எனும் தேவைப்பாட்டுக்கு பதிலாக **“அரசாங்க சேவை ஆணைக்குழு சுற்றறிக்கை இல 01/2020 இல் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கு அமைய ஒழுக்காற்றுத் தண்டனையொன்றை பெற்றிருத்தல் ஆகாது”** எனும் தேவைப்பாட்டை உள்ளடக்கி அந்த ஆட்சேர்ப்புத் திட்டங்கள் மற்றும் சேவைப் பிரமாணக் குறிப்புக்கள் திருத்தியமைக்கப்படுகின்றன.

02. தாபன விதிக்கோவையின் XLVIII ஆம் அத்தியாயத்தின் குற்றங்கள் தொடர்பான முதலாவது அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள தண்டனையொன்று விதிக்கப்பெற்ற உத்தியோகத்தரொருவர் அந்தக் குற்றத்தைப் புரிந்த தினத்திலிருந்து ஐந்து (05) வருட காலப்பிரிவும், தாபன விதிக்கோவையின் XLVIII ஆம் அத்தியாயத்தின் குற்றங்கள் தொடர்பான இரண்டாவது அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள தண்டனையொன்று விதிக்கப்பெற்ற உத்தியோகத்தரொருவர் அந்தக் குற்றத்தைப் புரிந்த தினத்திலிருந்து இரண்டு (02) வருட காலப்பிரிவும், தாபன

விதிக்கோவையின் XLVIII ஆம் அத்தியாயத்தின் 25.2 ஆம் பிரிவின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ளகுறுகிய ஒழுக்காற்று நடவடிக்கை முறையின் கீழ் தண்டனையொன்று விதிக்கப்பெற்ற உத்தியோகத்தரொருவர் அந்தக் குற்றத்தைப் புரிந்த தினத்திலிருந்து ஒரு வருட காலப்பிரிவும் கழியும் வரையில் ஆட்சேர்ப்புத் திட்டங்கள் மற்றும் சேவைப் பிரமாணக் குறிப்புக்களுக்கு அமைய மட்டுப்படுத்தப்பட்ட மற்றும் திறமை (சேவை அனுபவம்) பிரிவின் கீழ் ஆட்சேர்ப்பதற்கு அல்லது வெற்றிடங்களின் எண்ணிக்கைக்கு அமைய தரம் அடிப்படையிலான பதவி உயர்வுக்கு தகைமையற்ற உத்தியோகத்தரொருவராகக் கருதப்படல் வேண்டும்.

03. மட்டுப்படுத்தப்பட்ட மற்றும் திறமை (சேவை அனுபவம்) பிரிவின் கீழ் ஆட்சேர்ப்பதற்கு அல்லது வெற்றிடங்களின் எண்ணிக்கைக்கு அமைய வழங்கப்படும் தரம் அடிப்படையிலான பதவி உயர்வின் போது அல்லது விண்ணப்பங்கள் கோரப்படும் அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள திகதிக்கு உத்தியோகத்தரொருவரின் தகைமைகளைப் பரிசீலித்து எதிர்வரும் ஒரு தினத்திலிருந்து அமுலாகும் வண்ணம் ஆட்சேர்ப்பதற்கு அல்லது பதவி உயர்வு வழங்கப்படும் போது, உத்தியோகத்தர், தகைமைகளைப் பரீட்சிக்கும் திகதியிலிருந்து ஆட்சேர்ப்பு அல்லது பதவி உயர்வு செயல்வலுப்பெறும் திகதி வரையிலான காலப்பகுதயில் ஒழுக்காற்றுத் தண்டனையொன்றை பெற்றிருப்பின் மேற்படி 02 இல் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளை அந்த ஆட்சேர்ப்பு அல்லது பதவி உயர்வு செயல்வலுப்பெறும் திகதிக்கு ஏற்புடையதாக்கிக் கொள்வதற்கும் அந்தக் காலப்பிரிவுக்குள் புரிந்த குற்றமொன்று தொடர்பில் குற்றப்பத்திரமொன்று வழங்கப்பட்டிருப்பின் தாபன விதிக்கோவையின் XLVIII ஆம் அத்தியாயத்தின் 14.12 இல் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளை ஏற்புடையதாக்கிக்கொள்வதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

04. மேலும், உத்தியோகத்தரொருவரின் திருப்திகரமான சேவைக்காலம் கணக்கிடப்படும் சகல சந்தர்ப்பங்களிலும் அரசாங்க சேவை ஆணைக்குழுவின் நடைமுறை விதிகள் பிரிவு 186 (ii) க்கு அமைய திருப்திகரமான சேவைக் காலத்தை கணக்கிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டுமென அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் தீர்மானிக்கப்பட்டுள்ளதென்பதையும் அறியத்தருகின்றேன்.

05. இந்த சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகள் 2020.01.01 ஆம் திகதியிலிருந்து நடைமுறைக்கு வரும்.

அரசாங்க சேவை ஆணைக்குழுவின் பணிப்பிற்கமைய,

எம்.ஏ.பீ. தயா செனரத்
செயலாளர்,
அரசாங்க சேவை ஆணைக்குழு.